Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.267/2015

**Depositions of PW- 3**

| Name | திரு.சுரேஷ் | Occupation | தனியார் கம்பெனி ஊழியர் |
|---|---|---|---|
| Father's name | வையாளி | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of February 2026.

12.02.2026

1, 2ம் எதிரிகள் ஆஜர். 4மற்றும் 5ம் எதிரிகள் ஆஜரில்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் கம்பெனி ஒன்றில் பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணங்களிலுள்ள 2வது கையெழுத்துக்கள் என்னுடையது தான். கடந்த 06.08.2014ம் தேதி மதியம் 03.00 மணியளவில் ஆர்டிஓ ஆபிஸ் அருகே நானும் வைரமுத்து என்பவரும் நின்றுகொண்டிருந்தபோது போலீசார் எங்கள் நிறுவனத்தில் திருட்டு நடந்ததா என்று விசாரித்தார்கள். என்ன பொருட்கள் என்று கேட்டார்கள். முத்துராஜ் என்பவரை போலீசார் பிடித்தவுடன் அவர் மைக், புரொஜக்டர், ஆம்ப்ளிபயர் ஆகியவற்றோடு சேர்த்து வேறு பொருட்களையும் திருடியதாக தெரிந்துகொண்டேன். அவருடன் அவர் நண்பர்களும் இருந்தார்கள். நான் ஒப்புதல் வாக்குமூலத்திலும் அத்தாட்சியிலும் கையெழுத்து செய்து கொடுத்தேன். **4ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2வது கையெழுத்து அசாஆ.4 ஆகவும் மற்றும் அத்தாட்சிலுள்ள 2வது கையெழுத்து அசாஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

அசாஆ.4 மற்றும் அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களிலுள்ள கையெழுத்துக்களை வன்னியம்பட்டி காவல்நிலையத்தில் வைத்து தான் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.267/2015

**Depositions of PW- 4**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.வைரமுத்து | Occupation | கணக்காளர் |
| Father's name | பாண்டி | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of February 2026.

12.02.2026

1, 2ம் எதிரிகள் ஆஜர். 4மற்றும் 5ம் எதிரிகள் ஆஜரில்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் கணக்காளராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணங்களிலுள்ள முதலாவது கையெழுத்துக்கள் என்னுடையது தான். கடந்த 2015ம் ஆண்டு எங்கள் நிறுவனத்திற்கு சொந்தமான புரொஜக்டர், மைக், ஆம்ப்ளிபயர் ஆகிய திருடுபோன பொருட்கள் கிடைத்தவுடன் போலீசார் என்னை காவல்நிலையம் அழைத்து கையெழுத்து போட சொன்னார்கள். அதன் பேரில் நான் மேற்கண்ட ஆவணங்களில் கையெழுத்து செய்து கொடுத்தேன். **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து அசாஆ.6 ஆகவும், அத்தாட்சியிலுள்ள முதலாவது கையெழுத்து அசாஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் போலீசார் விசாரணையின்போது கடந்த 06.08.2014 ம் தேதி நானும் சுரேஷ் என்பவரும் ஆர்டிஓ அலுவலகம் அருகே நின்று கொண்டிருந்தோம் என்றும் அப்போது போலீசார் எங்கள் நிறுவனம் மற்றும் மற்ற நிறுவனங்களில் திருடியவர்களை பிடித்திருப்பதாக எங்களை அழைத்து சென்றார்கள் என்றும் போலீசாரிடம் எதிரி முத்துராஜ் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததில் நானும் சுரேஷ்ம் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்றும் பின்னர் முத்துராஜ் மற்ற எதிரிகளுடன் சேர்ந்து திருடிய பொருட்களை அவர் வீட்டிலிருந்து எடுத்துகொடுத்ததை போலீசார் அத்தாட்சியின் பேரில் கைப்பற்றினார்கள் என்றும் அந்த அத்தாட்சியில் நானும் சுரேஷ் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மையை பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.